# பெருநகர  சென்னை மாநகராட்சி

# கல்வித்துறை

**சென்னை பள்ளி மாணவன், ராஜா அண்ணாமலைபுரம் குடியிருப்போர் சங்கம்-மேற்கு அவர்களால், ஸ்ரீமதி நாராயண அம்மாள் கல்யாண மண்டபத்தில் நிகழ்த்திய, அறிவியல் ஆய்வு கண்காட்சியில் பங்கேற்று பரிசு வென்றார்.**




***CHS-CANAL BANK-PUSHPARAJ-IX STD***

*21-10-2018* அன்று, ராஜா அண்ணாமலை புரத்தில் நடைபெற்ற "அறிவியல் ஆய்வுகள்" விழாவில் முனைவர் டாக்டர். சுப்பையா பாண்டியன் மற்றும் அவருடைய உதவியாளர் அவர்களால் வாயு பொருட்களின் பண்புகளை மாணவ மாணவிகள் புரிந்து கொள்ளும்படி மிக எளிமையான சோதனைகள் முலம் விளக்கினர்.

இந்நிகழ்ச்சியில் மைலாப்பூர் பகுதியில் உள்ள பள்ளிகளில் இருந்து மாணவ மாணவிகள் பங்கேற்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியை சார்ந்த, கால்வாய் கரை சாலையில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளியிலிருந்தும் *40* மாணவர்கள், ஆசிரியர்கள், தலைமையாசிரியர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் ராஜா அண்ணாமலைபுரம் குடியிருப்போர் சங்கம்-மேற்கு சங்கத்தலைவர், பார்வையாளர்களில் மிக அதிகமான கேள்விகளுக்கு விடை அளிப்ப வர்க்கு பரிசு வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் இறுதியில் பெருநகர சென்னை மாநகராட்சியை சார்ந்த, கால்வாய் கரை சாலையில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் அ. புஷ்பராஜ் என்ற மாணவன் பரிசு பெற்றார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.